**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.105/2024 & SC.No.90/2024 - PW-2**

| | |
|---|---|
| Name | திரு. ஸ்ரீமன் ராகவன் |
| Husband/Father Name | சஞ்சிவீ |
| Village /Area | தென்மாம்பாக்கம் |
| Taluk | நெமிலி |
| Occupation | திரைப்படத் துறை கலை இயக்குநர் |
| Age | 41 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 18.11.2025.

**(எதிரிகள் 1, 3 மற்றும் 6 ஆஜர். எதிரி 4 மற்றும் 9 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். கடந்த 4 வருடங்களுக்கு முன்னர் தென்னரசு என்பவரது இரு சக்கர வாகனம் காணாமல் போய்விட்டது. அது சம்பந்தமாக தென்னரசு புகார் கொடுக்க அழைத்ததன் பேரில் நெமிலி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். அங்கு போலீசார் எங்களிடம் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது).**

20.05.2020 அன்று காலை 07.00 மணிக்கு நானும், எங்கள் தெருவில் வசிக்கும் வேதமுத்து மகன் விநாயகமூர்த்தி என்பவரும் பனப்பாக்கம் திருமால்பூர் ரோடு கிருஷ்ணன் என்பவர் நிலத்தில்

இருந்ததாவும், அங்கு வந்த நெமிலி உதவி ஆய்வாளர் 19.05.2020–ம் தேதி இரவு 07.00 மணியளவில் காஞ்சிபுரம் வட்டம், சிறுனை கிராமத்தை சேர்ந்த தென்னரசு என்பவர் தனக்கு சொந்தமான இரு சக்கர வாகனத்தை ரோட்டு ஓரம் நிறுத்தி டேங்க் கவரில் செல்போனை வைத்துவிட்டு தனது நண்பரிடம் பேசிவிட்டு வந்து பார்த்த போது இரு சக்கர வாகனமும், செல்போனும் காணாமல் போனது குறித்து நெமிலி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், இது சம்மந்தமாக நெமிலி உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயாரிப்பதாக கூறி சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் நானும் விநாயகமும் சாட்சி கையொப்பம் செய்து விட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** இல்லை

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.18 17:04:20 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.